# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

## <u>உமறுப்புலவர் முத்தமிழ் மன்றம்</u>

### <u>பாரதியார் பிறந்தநாள் விழா</u>

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியில் 16.12.16 அன்று மதியம் 2.30 மணி அளவில் உமறுப்புலவர் முத்தமிழ் மன்றத்தின் சார்பாக பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமானது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா. அருணாஜோதி எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி. வரவேற்புரை வழங்கினார். கல்லூரி இயக்குநர் முனைவர் மெர்சி ஹென்றி எம்.ஏ., பி.எச்.டி. சிறப்பு விருந்தினர் நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திரு. சு. அந்தோணி செல்வகுமார் எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி. அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கினார். மன்ற மாணவச் செயலர் மூன்றாமாண்டு தமிழ் இலக்கிய மாணவி வி. சண்முகசுந்தரி மன்ற செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை வாசித்தார். சிறப்பு விருந்தினர் முனைவர் திரு.சு.அந்தோணி செல்வகுமார் எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி. பாரதியார் வளர்ந்த விதம், சமூக சீர்த்திருத்தவாதிகளாக மாறியது, பெண்விடுதலைக்கு வித்திட்டது என்று பாரதியர் பற்றிய செய்திகளை சிறப்புரை ஆற்றினார்.

மன்ற மாணவத் துணைச்செயலர் இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவி சி. நஸ்ரின் பாத்திமா நன்றியுரை கூற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

இவ்விழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியைகளும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ்த்துறையினர் செய்திருந்தனர்.